FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364153

1. District : Namakkal PS: VAC Year: 2026 FIR No.: 05/AC/2026 Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள் 10.06.2026

2. (i) Act சட்டம்: The PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7(a), 7(a) r/w 12

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: BNSS — Sections பிரிவுகள்: 61(1)

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : Date from : — Date to : 04.06.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 1530hrs Time to : 2130 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 05.06.2026 Time : 1600hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Vol-II Time : 1630 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.06.2026 நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 30 Kms North east
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : — (b) Address : Sub Registrar office, Rasipuram.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Kannan (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர் Tr. Shanmugam

(c) Date / Year of Birth : Age-57 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Tahsildar / Spl. ICO (g) Address : o/o the Spl. Tahsildar, Disaster Management, Collectorate, Namakkal.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. R. Sathiyamoorthi, Assistant / Sub Registrar (FAC), Rasipuram, Namakkal Dt.

2) S. Selvakumar s/o Sakthivel, D.No. 2/104, Karpagam Village, T. Perumapalayam, Salem (Private Individual)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

For obtaining concurrence from DVAC, Chennai.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted,

Separate sheets enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction. —

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

10/06/2026
(K. Kannan)

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

10/06/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 10.06.2026 1730hrs

Name: பெயர் S. PRABHU,
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
VAC, Namakkal.

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/AC/2026, u/s. 7(a), 7(a) r/w 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 & 106(1) BNSS-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...,

இன்று 10.06.2026-ஆம் தேதி புதன்கிழமை மாலை 16:30 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்த போது ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம் சென்னையிலிருந்து பெறப்பட்ட வாய்மொழி உத்தரவின்படி, கடந்த 05.06.2026 மாலை 16.00 மணியளவில் தனி வட்டாட்சியர், (பேரிடர் மேலாண்மை), மாவட்ட ஆட்சியரகம், நாமக்கல் மற்றும் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் திரு.S.கண்ணன் அவர்கள் நாமக்கல் மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் நேரில் ஆஜராகி தட்டச்சு செய்து கொடுத்த புகாரினை இன்று 10.06.2026-பரிசீலனை செய்து உத்தரவுப்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்கிறேன். மேற்படி புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் S. கண்ணன், தனி வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) மாவட்ட ஆட்சியரகம், நாமக்கல். நாமக்கல் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர்-1 நாமக்கல் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, நாமக்கல். ஐயா, பொருள்: திடீர் தணிக்கை- நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 04.06.2026 பிற்பகல் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் ஒப்படைத்தல் மற்றும் நடவடிக்கை எடுக்க கோருதல்-தொடர்பாக. நான் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவுப்படி நாமக்கல் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலராக 04.06.2026-அன்று பணிபுரிந்தேன். நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் மற்றும் பிற அலுவலர்கள் பத்திரப்பதிவு, வில்லங்கச் சான்று அளித்தல், பத்திர நகல் அளித்தல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், பத்திர எழுத்தர்கள், புரோக்கர்கள் மூலமாகவும், அலுவல் நேரத்திலும், அதற்கு பின்பும் கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 04.06.2026-ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 15.30 மணியளவில் இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் மற்றும் திரு.S.சரவணன், தனி வட்டாட்சியர், (தேர்தல்கள்), மாவட்ட ஆட்சியரகம், நாமக்கல்

மற்றும் நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் அலுவலர்களுடன் இணைந்து இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த அலுவலகமானது இராசிபுரம்- சேலம் செல்லும் சாலை கச்சேரி தெருவில் கிழக்கு பார்த்தவாறு முதல் தளத்துடன் கூடிய புதிய அரசு கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ளே நுழைந்து சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டுத்தெரிந்த திரு.ர.சத்தியமூர்த்தி சிறப்பு ஆய்வுக்குழுவினராகிய எங்களையும், எங்களுடன் வந்திருந்த நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் அலுவலர்களையும் அவரவர்களின் அடையாள அட்டைகளை காட்டி அறிமுகம் செய்து கொள்ளப்பட்டது. சார்பதிவாளர் அவர்களிடம் விசாரிக்க, அவர் இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 01.09.2025-ஆம் முதல் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், மேலும் சார்பதிவாளராக முழு கூடுதல் பொறுப்பு வகித்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர்கள் மற்றும் காவல் குழுவினர் சார்பதிவாளரிடம் அவருடைய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, அதன்பிறகு அவர் முன்னிலையில் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திருமதி.K.அம்பிகாவதி, அலுவலக உதவியாளர் திரு.R.பாலசுப்பிரமணியம், தகவல் தொகுப்பு பணியாளர்கள் திருமதி.S.தேவி மற்றும் திருமதி.E.பூங்கொடி ஆகிய அலுவலர்கள் அலுவலகத்தில் பணியில் இருந்தனர். சார்பதிவாளர் அவர்களிடம் பத்திர பதிவு முடிந்துவிட்டதா என்று கேட்க, அவர் இன்னும் 2 பத்திரங்கள் பதிவு செய்ய வேண்டி உள்ளது என்று தெரிவித்ததால் அலுவலர்களை தொடர்ந்து பணி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. பின்னர் பொதுமக்கள் காத்திருக்கும் அறையில் இருந்தவர்களிடம் அங்குள்ள இருக்கைகளில் தொடர்ந்து அங்கேயே அமர்ந்து இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அங்கு அமர்ந்திருந்தவர்களை ஒவ்வொரு நபர்களாக அழைத்து விசாரிக்கப்பட்டது. அதில் ஒரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் S.செல்வகுமார், வயது-35, த/பெ சக்திவேல், க.எண்-2/104, கற்பகம் கிராமம், டி.பெருமாபாளையம்

அஞ்சல், சேலம் என்றும் தான் அவ்வப்போது தனது வீட்டிலிருந்து பத்திரம் டைப் செய்து தனக்கு தெரிந்த வக்கில் திரு.சுரேஷ் என்பவரிடம் கையொப்பம் பெற்று பத்திரபதிவு செய்து வருவதாகவும், இன்று தான் நாமக்கல் மாவட்டம் குருசாமிபாளையத்தை சேர்ந்த நாராயணசாமி என்பவரின் மனைவி திருமதி.தேன்மொழி என்பவர் பெயரில் 85-R குமாரபாளையம் என்ற ஊரில் உள்ள புதிதாக கட்டிய வீட்டை வாங்கி கிரையம் செய்யவும், அதற்கு சேலம் DCB வங்கியில் அடமான கடன் வாங்கி, வங்கியின் பெயரில் MOD செய்யவும் ஆவணம் தயாரித்து சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்து ஆவண பதிவு முடித்து காத்திருந்ததாகவும் சொன்னார். மேலும் அவரை சோதனையிட்டதில் அவரது சட்டையின் உள்பாக்கெட்டில் இருந்து ரூ.17,500/-ம், வெளிப்பாக்கெட்டில் இருந்து ரூ.420/- எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து கேட்க ரூ.420/- தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாகவும், ரூ.17,500/- பத்திர செலவிற்காக வைத்திருப்பதாகவும், தேன்மொழி அவர்களிடம் திருப்பிக் கொடுப்பதற்காக வைத்திருப்பதாகவும், முன்னுக்குப்பின் முரணாக பதில் சொன்னார். ஆகையால் சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் ரூ.420/- அவரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. மேற்படி பணம் ரூ.17,500/-க்கு அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இல்லாததாலும், அவர் இடைத்தரகராக செயல்பட்டு மேற்படி பணம் ரூ.17,500/- சார்பதிவாளருக்கு கையூட்டாக கொடுக்க கொண்டு வரப்பட்ட பணமாக இருக்கலாம் என சந்தேகிக்க சரியான முகாந்திரம் இருந்ததால் அப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தில் ஆஜரில் இருந்த ஆவணப்பதிவு மற்றும் வேறு அலுவல் நிமித்தமாக அங்கு வந்திருந்த பின்வரும் நபர்களை விசாரணை செய்யப்பட்டது. 1) G.நாரயணசாமி, வயது-50, த/பெ கோவிந்தசாமி, க.எண் - 9/84, குருசாமிபாளையம், இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம், 2) A.அருண்பாபு, வயது-45, த/பெ.அப்பியண்ணன், க.எண்.7/156-பி, அத்தனூர், இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம், 3) P.பாலசுப்பிரமணியம், வயது-59, த/பெ பொன்னுசாமி, க.எண் -5/97சி, சிங்களாந்தபுரம், இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம், 4) N.பாலகிருஷ்ணன், வயது-59, த/பெ நடராஜன், க.எண் -153, அன்னை

சத்யா நகர், நாமகிரிபேட்டை, இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம், 5) R.சுமதி, வயது-53, க/பெ ராஜா, க.எண்.483-இ, ஆத்தூர் மெயின் ரோடு, நாமகிரிப்பேட்டை, இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம், 6) M.பொன்னாமலை, வயது-60, த/பெ மாரிமுத்து, க.எண்-5/56, நாடார் தெரு, பழனியப்பனூர், இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம், 7) K.சீரங்க ரங்கநாதன், வயது-51, த/பெ. கந்தன், க.எண்.2/80, ஆலாம்பட்டி, அத்தனூர், இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம், அவரது மனைவி 8) திருமதி.ராஜேஸ்வரி க/பெ. K.சீரங்க ரங்கநாதன் 9) திருமதி.வாணிஸ்ரீ க/பெ. லோகநாதன், 10) திருமதி.தேன்மொழி, க/பெ.நாராயணசாமி, 11) திரு.அருண்பாண்டியன், த/பெ.முருகேசன், 12) திருமதி.பத்மாவதி க/பெ.அருண்பாண்டியன், 13) திருமதி.உமா க/பெ. பாஸ்கர், 14) திருமதி.மல்லிகா த/பெ. கந்தன், 15) திரு.கோபிநாத் த/பெ.ராஜாராம், 16) திருமதி.சாந்தி, க/பெ.ராஜாராம், 17) திரு.ரங்கநாதன், த/பெ.கோபால், 18) திரு.கார்த்திகேயன் த/பெ.சண்முக சுந்தரம், 19) திரு.வரதராஜ், த/பெ. ராஜ், 20) திருமதி.செல்வமணி, க/பெ.பொன்னாமலை, 21) திருமதி.சூடாமணி க/பெ.சிவாஜி, 22) திரு.சுந்தரம் த/பெ. கைலாசகவுண்டர், 23) திரு.கோவிந்தராஜ், த/பெ.சுப்பிரமணி, 24) திரு.துரைசாமி த/பெ.ராமசாமி, 25) திருமதி.பார்வதி க/பெ. கந்தசாமி, திருமதி.மகேஸ்வரி க/பெ.நடராஜன், 26) திரு.கந்தசாமி த/பெ.ரங்கன், 27) திரு.வெங்கடாசலம் த/பெ.ராமசாமி, 28) திரு.கோகுல் த/பெ.ஈஸ்வரன், 29) திரு.பூபாலன் த/பெ.ரத்தினம், 30) திரு.சந்தோஷ்குமார் த/பெ மாதேஸ்வரன், 31) திரு.அத்தியப்பன் த/பெ.சின்னுசாமி, 32) திரு.பூவிழிராஜா த/பெ.மாதேஸ்வரன் ஆகியோரை அவர்கள் வருகைக்கான காரணம் விசாரிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் வசம் வைத்திருந்த பணத்திற்கு நம்பத்தகுந்த காரணம் தெரிவித்ததாலும், அவர்கள் அளித்த பதில்கள் திருப்திகரமாக இருந்ததாலும் அவர்கள் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து விசாரணைக்குப்பின் அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் அங்கிருந்த இருநபர்களை விசாரித்தபோது, அதில் ஒருவர் தனது பெயர் கருணாநிதி த/பெ. வெங்கடாசலம் என்றும், தான் அரசு பதிவு பெற்ற பத்திர எழுத்தர் என்றும், தன்னுடைய பத்திர எழுத்தர் உரிமம் எண்.A/2070/NMK/99 என்றும், தான் இராசிபுரம்

பகுதியில் பத்திர பதிவு வேலைகள் செய்து வருவதாகவும், திரு.பொன்னாமலை என்பவரின் உயில் பத்திரத்தை பதிவு செய்ய உதவிக்கு வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ததில் அவரது சட்டை பாக்கெட்டில் பணம் ரூ.1040/- வைத்திருந்தார். அதுகுறித்து கேட்க, தனது சொந்த செலவிற்காக கொண்டு வந்திருப்பதாக சொன்னார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்தப் பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மற்றொருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் செழியன் த/பெ.அசோகன் என்றும், தான் அரசு பதிவு பெற்ற பத்திர எழுத்தர் என்றும், தன்னுடைய பத்திர எழுத்தர் உரிமம் எண்.A/1871/99/NMK என்றும், தான் இராசிபுரம் பகுதியில் பத்திர பதிவு வேலைகள் செய்து கொடுத்து வருவதாகவும், தனது வாடிக்கையாளர் ஒருவரின் உயில் பத்திரத்தை பதிவு செய்வது சம்மந்தமாக சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ததில் அவரது சட்டை பாக்கெட்டில் பணம் ரூ.1,500/- வைத்திருந்தார். அதுகுறித்து கேட்க, தனது சொந்த செலவிற்காக கொண்டு வந்திருப்பதாக சொன்னார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்தப் பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அன்றைய பத்திர பதிவு அலுவல்களை முடித்தபிறகு சார்பதிவாளர் திரு.சத்தியமூர்த்தி அவர்களை உடன் அழைத்துக் கொண்டு சார்பதிவாளர் அலுவலக நுழைவாயிலுக்கு வந்து அங்கிருந்த பொதுமக்கள் காத்திருக்கும் அறையில் சோதனை செய்தபோது அங்கு மெயின்டோர் அருகில் போடப்பட்டிருந்த ஒரு பழைய கம்ப்யூட்டர் டேபிளை சோதனை செய்தபோது, அதன்டியில் ஒரு–ரோஸ் கலர் பை ஒன்று மடிக்கப்பட்டு கிடந்தது. அதை எடுத்து பார்வையிட்டதில் அந்த பையில் அருட்பிரசாதம் ஓம் ஸ்ரீசற்குரு அப்பா பைத்தியம் சுவாமிகள் திருக்கோயில் சூரமங்கலம், சேலம்-636005 என பிரிண்ட் செய்யப்பட்டிருந்தது. அந்த பையை திறந்து பார்க்க அதில் கத்தையாக 500 ரூபாய் நோட்டுகள் ஒரு கட்டு இருந்தது. அதை எண்ணிப் பார்க்க 500 ரூபாய் நோட்டுகள்-100 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.50,000/- இருந்தது. அந்த பணத்திற்கு சார்பதிவாளர் மற்றும் பிற அலுவலர்களிடமும், பொதுமக்களிடமும், யாரேனும் உரிமை கோருகிறீர்களா என்று கேட்கப்பட்டது. அந்தப் பணத்திற்கு யாரும் உரிமை

கோராததால் அந்தப்பையுடன் பணம் ரூ.50,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த காத்திருப்போர் அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தில் இருந்த அதனுள்ளே இருந்த கழிவறையும் சோதனை செய்யப்பட்டதில், அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்த மெயின் ஹாலில் உள்ள அலுவலக உதவியாளர் திரு.R.பாலசுப்பிரமணியம் அவர்களின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அவரை சோதனையிட்டதில் அவரது மணிபர்சில் இருந்த பணம் ரூ.700/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதுபற்றி அவரை விசாரிக்க அவர் இன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த பணம் ரூ.600/- கொண்டு வந்திருந்ததாகவும், அதை பணியாளர் தனிநபர் தனி உறையில் வைக்கப்படும் பதிவேடு-2026 பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார். அதை பணியாளர் தனிநபர் தனி உறையில் வைக்கப்படும் பதிவேடு-2026 பதிவேட்டுடன் சரிபார்க்க சரியாக இருந்ததால் அந்த பணம் ரூ.600/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் கூடுதலாக இருந்த பணம் ரூ.100/- குறித்து கேட்டபோது தனக்கு மருந்து மாத்திரை வாங்குவதற்கு தனது பையில் வைத்திருந்ததை மேற்படி பதிவேட்டில் எழுத மறந்துவிட்டதாகவும் சொன்னார். மேலும் அவரது பையில் சோதனை செய்த போது அவரது கண் கண்ணாடி வைக்கும் பெட்டியில் இரண்டு 100 ரூபாய் நோட்டுகள் இருந்தது. அதுகுறித்து கேட்டபோது, அவர் தான் எப்போது கண்ணாடி பெட்டியில் பணம் வைத்தேன் என்று நினைவில்லை என்றும், ரொம்ப நாட்களுக்கு முன்பு வைக்கப்பட்ட பணமாக அது இருக்கலாம் என்றும் சொன்னார். அவர் கூறிய விளக்கம் ஏற்கப்பட்டு மேற்படி தொகைகள் ரூ.300/- அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் அமர்ந்திருக்கும் ஹாலின் தென்கிழக்கு மூலையில் உள்ள பெண்கள் கழிப்பறை, ஹாலின் தெற்கில் உள்ள ஆண்கள் பொது கழிப்பறை மற்றும் ஹாலின் தென்மேற்கில் உள்ள சிறிய அறை முழுவதும் சந்தேகத்தின் பேரில் முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ

ஏதும் இல்லை. பின்னர் அலுவலக ஹாலின் சார்பதிவாளர் இருக்கைக்கு வலதுபுறம் உள்ள தகவல் தொகுப்பு பதிவாளர் திருமதி.S.தேவி அவர்களின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அவரது கைப்பை சோதனையிடப்பட்டது. அதில் பணம் ரூ.380/- இருந்தது. அதுபற்றி அவரை விசாரித்ததில் இன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த பணம் ரூ.380/- கொண்டு வந்திருந்ததாகவும், அதை பணியாளர் தனிநபர் தனி உறையில் வைக்கப்படும் பதிவேடு-2026 பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார். அதை மேற்படி பதிவேட்டுடன் சரிபார்க்க சரியாக இருந்ததால் அந்த பணம் ரூ.380/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் இராசிபுரம் சார்பதிவாளரின் இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் சார்பதிவாளர் திரு.சத்தியமூர்த்தி அவர்களை சோதனையிட்டதில் அவரது மணிபர்சில் பணம் ரூ.220/- இருந்தது. அவரை விசாரித்ததில் இன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த பணம் ரூ.500/- கொண்டு வந்திருந்ததாகவும், அதை பணியாளர் தனிநபர் தனி உறையில் வைக்கப்படும் பதிவேடு-2026 பதிவேட்டில் பதிவு செய்து கையொப்பம் செய்துள்ளதாகவும் தெரிவித்தார். அதை பணியாளர் தனிநபர் தனி உறையில் வைக்கப்படும் பதிவேடு-2026 பதிவேட்டுடன் சரிபார்க்க அதில் 04.06.2026 தேதியிட்ட பதிவில் ரூ.500/- என்று எழுதப்பட்டு இருந்தது. எனவே அந்த பணம் ரூ.220/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் அலுவலக ஹால் முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் சார்பதிவாளர் அவர்களை உடன் அழைத்துக் கொண்டு வடமேற்கு பக்கம் உள்ள மாடிப்படிக்கு அடியில் கிடந்த ஆவணங்கள், பதிவேடுகள் முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் சார்பதிவாளர் அமர்ந்திருக்கும் ஹாலின் வடக்கு பக்கம் கண்ணாடியால் தடுக்கப்பட்டிருந்த கணினி அறையில் தகவல் தொகுப்பு பணியாளர் செல்வி.E.பூங்கொடி அவர்களின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு

சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அவரது கைப்பை சோதனையிடப்பட்டது. அதில் பணம் ரூ.550/- இருந்தது. அதுபற்றி அவரை விசாரித்ததில் இன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த பணம் ரூ.550/- கொண்டு வந்திருந்ததாகவும், அதை தனிநபர் தனி உறையில் வைக்கப்படும் பதிவேடு-2026 பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார். அதை மேற்படி பதிவேட்டில் சரிபார்க்க சரியாக இருந்ததால் அந்த பணம் ரூ.550/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த கணினி அறையில் உதவியாளர் திருமதி.க.அம்பிகாவதி அவர்களின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அவரது கைப்பை சோதனையிடப்பட்டது. அதில் பணம் ரூ.350/- இருந்தது. அதுபற்றி அவரை விசாரித்ததில் இன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த பணம் ரூ.350/- கொண்டு வந்திருந்ததாகவும், அதை தனிநபர் தனி உறையில் வைக்கப்படும் பதிவேடு-2026 பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார். அதை மேற்படி பதிவேட்டில் சரிபார்க்க சரியாக இருந்ததால் அந்த பணம் ரூ.350/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த கணினி அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் கணினி அறையை ஒட்டியவாறு கிழக்குப் பக்கமாக உள்ள இ-ஸ்டாம்ப் அறைக்கு சென்று அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் அலுவலகத்தின் முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டு வழியில் உள்ள ரேக்குகள் முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் அங்கிருந்து படிகட்டு வழியாக முதல் தளத்திற்கு சென்று அங்குள்ள பதிவறை-1 மற்றும் பதிவறை-2 முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அதனைத் தொடர்ந்து அதன் வடக்கு திசையில் டைனிங் அறைக்கு சென்று முழுவதும் சோதனையிடப்பட்டது. அந்த அறையில் பழைய ஆவணங்கள் மூட்டை கட்டி போடப்பட்டிருந்தது. மேலும் அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ,

பொருளோ ஏதும் இல்லை. மேலும் சார்பதிவாளர் அலுவலகத்தின் எந்தப் பகுதியிலும் லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம் என்ற வாசகத்துடன் கூடிய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையின் நாமக்கல் மாவட்டம் மற்றும் சென்னை இயக்குநரக அலுவலகத்தின் முகவரி தொலைப்பேசி எண்கள் அடங்கிய அறிவிப்பு பலகை எதுவும் அரசாணையை பின்பற்றி வைக்கப்படவில்லை என கண்டறியப்பட்டது. பின்னர் திடீர் தணிக்கையின் தொடர்ச்சியாக இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தின் கீழ்கண்ட ஆவணங்கள் பார்வையிடப்பட்டது.

1) "A" கணக்கு ஆன்லைன் நகல் எடுத்து பார்வையிட்டதில் இன்றைய தினம் 04.06.2026-ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவண எண்கள்.1/2940/2026 முதல் 1/2980/2026 வரை பதிவுகள் உள்ளது பார்வையிடப்பட்டது. அதில் இராசிபுரம் சார்பதிவாளர் அவர்களிடம் கையொப்பம் பெற்று கைப்பற்றப்பட்டது (4 தாள்கள்).
2) நிரந்தர முன்பண பதிவேடு தொகுதி எண் எண்.11 பார்வையிடப்பட்டது. 04.06.2026-ஆம் தேதியில் நிரந்தர முன்பணம் ரூ.250/- சரியாக உள்ளது. (2 தாள்கள்)
3) தனி நபர் உறையில் வைக்கப்படும் பதிவேடு தொகுதி எண்.124 பார்வையிடப்பட்டது. அதில் பக்கம்-51-ல் 04.06.2026-ம் தேதி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (2 தாள்கள்)
4) வருகைப் பதிவேடு-2026 தொகுதி எண்.124 பார்வையிடப்பட்டது. அதில் உள்ள 2026-ம் ஆண்டின் ஜூன் மாதத்திய வருகை பதிவேட்டில் சார்பதிவாளர் திரு.சத்தியமூர்த்தி மற்றும் இதர அலுவலர்கள் இன்றைய தினம் சுருக்கொப்பங்கள் செய்திருந்தனர். (2 தாள்கள்)

மேற்கண்ட பதிவேடுகள் அனைத்தும் பார்வையிடப்பட்டதற்கு அடையாளமாக சம்பந்தப்பட்ட பக்கங்களில் (கணினி பதிவேடு தவிர) சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர்கள் கையொப்பம் செய்தனர். அதன் ஒளி நகல்கள் எடுக்கப்பட்டு, சார்பதிவாளர் திரு.ர.சத்தியமூர்த்தி அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு தொடர் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது பொறுப்பு

சார்பதிவாளர் திரு.ர.சத்தியமூர்த்தி, உதவியாளர் திருமதி.V.அம்பிகாவதி, அலுவலக உதவியாளர் திரு.R.பாலசுப்பிரமணியம் மற்றும் தனிநபர் திரு.S.செல்வகுமார் ஆகியோரின் வாக்குமூலங்கள் தனித்தனியாக பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். மேலும் அலுவலக உடைமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்து கொள்ளப்பட்டது. இந்த திடீர் தணிக்கை செயல்முறை நடவடிக்கைகள் 04.06.2026-ம் தேதி இரவு 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இன்று 05.06.2026-ம் தேதி பிற்பகல் 15.00 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி, இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத எவராலும் உரிமை கோரப்படாத ரோஸ் கலர் பையுடன் கூடிய பணம் ரூ.50,000/- மற்றும் திரு. S.செல்வகுமார் என்பவர் வசமிருந்து கைப்பற்றப்பட்ட சந்தேகத்திற்கிடமான கணக்கில் வராத பணம் ரூ.17,500/- மற்றும் ஆவணங்கள், திடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் சட்டப்படியான நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன் உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம்/-XXX05/06/2026 (S.Kannan)

Sir,

I received a computer typed complaint from Tr.S.Kannan, Spl.Tahsildar / Spl.ICO, Disaster Management, Collectorate, Namakkal District on 05.06.2026 at 16.00 hrs and waiting for concurrence from DVAC, Chennai to register a Regular case. Sd/-(xxx) (S.Prabhu) 10/06/26. Inspector of Police, V&AC., Namakkal.

Sir,

I received a computer typed complaint from Tr.S.Kannan, Spl.Tahsildar / Spl.ICO, Disaster Management, Collectorate, Namakkal District on 05.06.2026 at 16.00 hrs and awaited for concurrence from DVAC to register a Regular case and after getting oral concurrence from the Directorate of Vigilance and Anti-Corruption, Chennai and I registered a case in Namakkal Vigilance and Anti-Corruption Crime No.05/AC/2026, u/s. 7(a), 7(a) r/w 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 & 106(1) BNSS on 10.06.2026 at 16.30 hrs against the accused Tr.R.Sathiyamoorthi, Assistant / Sub Registrar(FAC), Rasipuram, Namakkal District and Tr.S.Selvakumar,(Private Individual) Sd/- (xxx) (S.Prabhu) 10/06/26. Inspector of Police, V&AC., Namakkal.

The original FIR along with original computer typed complaint of the complainant Tr.S.Kannan are submitted to the Hon'ble Court of Principal District and Sessions Judge, Namakkal and remaining copies are sent to the officers concerned.

10/06/26

(S. PRABHU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Namakkal.